செ.வெ.எண்: 11 நாள்:07.07.2020

கரூர் மாவட்டம்

**ஒரு லட்சம் குடும்பங்களுக்கு சொந்த செலவில் உடலுக்கு வலுசேர்க்கும் சத்துமாத்திரைகள் மற்றும் நோய்எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் கபசுரக்குடிநீர் தயாரிக்கும் பொடிகளை மாண்புமிகு போக்குவரத்துத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்**

**அதன் விபரம் வருமாறு:**

ஒரு லட்சம் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு தனது சொந்த செலவில் பொதுமக்களுக்கு உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக்கூடிய கபசுரக்குடிநீர் தயாரிக்கும் சூரணப்பொடிகளையும், உடலுக்கு வலுசேர்க்கும் சத்துமாத்திரைகளையும் வழங்கும் நிகழ்வை கரூர் நகராட்சிக்குட்பட்ட வெங்கமேடு வாங்கப்பாளையம் என்.கே.நகர் பகுதி பொதுமக்களுக்கு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (07.07.2020) வீடுவீடாகச் சென்று வழங்கி துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் கலந்துகொண்டார்.

பின்னர் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவாமல் தடுக்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில், ஒரு லட்சம் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு எனது சொந்த செலவில் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆற்றல் கொண்ட கபசுரக்குடிநீர் மற்றும் சத்து மாத்திரைகளை வழங்க திட்டமிடப்பட்டு இன்று வெங்கமேடு வாங்கப்பாளையம் என்.கே.நகர் பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நம் முன்னோர்களால் வழிவழியாக கடைபிடிக்கப்பட்ட சித்தமருத்துவ முறைப்படி, 15 வகையான மூலிகைகளின் கலவையாக உருவாக்கப்பட்டதுதான் கபசுரக்குடிநீர். உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் வல்லமை பெற்ற கபசுரக்குடிநீரை தயார் செய்யத் தேவையான அளவு சூரணப்பொடிகள் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்தப்பொடியினை எவ்வாறு காய்ச்சிப்பருக வேண்டும் என்ற வழிகாட்டிநெறிமுறைகள் அடங்கிய விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு நபருக்கு சுமார் 5 கிராம் அளவுள்ள கபசூரணப்பொடியை 240 மில்லி தண்ணீரில் போட்டு அதை 60 மில்லியாக நன்கு காய்ச்சியபின் பருகவேண்டும். 3 வயது முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு 10 மில்லி முதல் 20 மில்லி வரையிலும், 5 வயது முதல் 12 வயதுவரை உள்ளவர்களுக்கு 30 மில்லி அளவிலும் கபசுரக்குடிநீரை வழங்கலாம். 12 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் 60 மில்லி அளவிலான கபசுரக்குடிநீரை காலை சாப்பாட்டிற்கு முன் வழங்கலாம். வயிற்றுப்புண் உள்ளிட்ட வயிறு உபாதைகள் உள்ளவர்கள் சாப்பாட்டிற்கு பின் இந்த கபசுரக்குடிநீரைப் பருகலாம் என்ற தகவல் அனைவருக்கும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்டத்தில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போர்க்கால நடவடிக்கையில் எடுக்கப்பட்டு வருகின்றது. பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் கொரோனா தொற்றை ஒழிக்க இயலாது. எனவே, கொரோனா தொற்றை கட்டுப்படுத்த தமிழக அரசு எடுத்துவரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் தங்களின் முழு ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூறிய “விழித்திரு, விலகியிரு, வீட்டிலிரு” என்ற கோட்பாட்டை சரியாக கடைபிடித்து கொரோனா தொற்று இல்லாத மாவட்டமாக கரூர் மாவட்டத்தை மாற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கரூர் வெங்கமேடு இடையே ராஜவாய்க்கால் குறுக்கே ரூ.50 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுவரும் பாலத்தின் கட்டுமானப்பணிகளைப் பார்வையிட்டு ஆய்வுசெய்த மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வில், மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தலைவர் திரு. பேங்க் நடராஜன், முன்னாள் நகர்மன்றத்தலைவர் திரு.தமிழ்நாடு செல்வராஜ், கரூர் வட்டாட்சியர் திருமதி.அமுதா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.